# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 9 | சைவநெறி | நேரம் :- 2.00மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ......................................................................................

### பகுதி I

* சரியான விடையைத் தெரிவு செய்க

01. "யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி" என கூறியவர்
    1. நாவுக்கரசர் 2. திருமூலர் 3. திருவள்ளுவர் 4. சம்மந்தர்
02. மகாபாரதத்தில் வரும் தருமனிடம் மேலோங்கியிருந்த விழுமியப் பண்பு
    1. சகிப்புத்தன்மை 2. நன்றி மறவாமை
    3. நீதியான ஆட்சி 4. சகோதரத்துவம்
03. "காதலாகிக் கசிந்து…….."என்னும் பதிகத்தின் பண்.
    1. நட்டராகம் 2. காந்தாரபஞ்சமம் 3. தக்கேசி 4. கௌசிகம்
04. திரிகரங்கள் எனப்படுபவை.
    1. மனம், வாக்கு, காயம் 2. மனம், புத்தி, சித்தம்
    3. அறம், பொருள், இன்பம் 4. புதி, பசு, பாசம்
05. ஒரு திதியின் அரைப்பங்கு.
    1. யோகம் 2. வாரம் 3. கரணம் 4. நட்சத்திரம்
06. அட்ட வீரட்டத்தலங்களில் ஒன்றாக அமைவது.
    1. திருக்கோணேச்சரம் 2. திருக்கேதீச்சரம்
    3. திருக்கழுமலம் 4. திருக்குறுக்கை வீட்டாரம
07. வாழ்க்கையின் நான்கு படிநிலைகளில் பிரமச்சரியம் குறிப்பது.
    1. இல்லறம் 2. துறவறம் 3. மாணவநிலை 4. முழுத்துறவு நிலை
08. படைத்தல் தொழிலின் அதிபதி.
    1. பிரம்மன் 2. திருமால் 3. சிவன் 4. மகேஸ்வன்
09. விழுப்பம் என்ற சொல்லின் பொருள்.
    1. மேன்மை 2. சத்த்தியம் 3. உண்மை 4. அறிவு
10. வானியல் அடிப்படையிலான கால அட்டவணை.'
    1. அகராதி 2. அர்த்தசாஸ்திரம் 3. பஞ்சாங்கம் 4. ஏடு
11. நட்சத்திரங்களின் எண்ணிக்கை.
    1. 18 2. 27 3. 16 4. 21
12. திருக்கார்த்திகை விளக்கீடு சிறப்பாக நடைபெறும் ஆலயம்.
    1. கதிர்காமம் 2. திருச்செந்தூர் 3. சிதம்பரம் 4. திருவண்ணாமலை



kalvi.lk

13. பன்றி வடிவமெடுத்து பூமியைத் அகழ்ந்தவர்.

1. திருமால் 2. பிரம்மா 3. சதாசிவன் 4. சிவன்

14. பஞ்சாட்சரம் எனப்படுவது

1. நமசிவாய 2. சரவணபவ 3. சிவாயசிவ 4. சிவசிவ

15. "காப்பதோர் வில்லும் அம்பும்......" என்ற பதிகம் கூறும் நாயனார்.

1. திருஞானசம்பந்தர் 2. சுந்தரமூர்த்தி நாயனார்
3. திருநாவுக்கரசர் 4. கண்ணப்பநாயனார்

16. மும்மலங்களும் ஆவன.

1. பதி, பசு, பாசம் 2. ஆணவனம், கன்மம், மாயை
3. சிந்து, அசித்து, சிதசித்து 4. ஆணவம், ஆன்மா, கடவுள்

17. கன்றை இழந்த தாய்ப்பசுவின் துயர்கண்டு வருந்திய மன்னன்.

1. மனுநீதி கண்ட சோழன் 2. சிவச்சக்கரவர்த்தி
3. இராஜேந்திர சோழன் 4. கங்கை கொண்ட சோழன்

18. "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது......" எனக் கூறியவர்.

1. விவேகானந்தர் 2. திருவள்ளுவர் 3. விபுலானந்தர் 4. தாயுமானவர்.

19. அடங்கன் முறை எனப்படுவது.

1. திருவாசகம் 2. தேவாரம் 3. திருவிசைப்பா 4. திருப்பல்லாண்டு

20. ஆன்மாவின் இறுதி இலட்சியம்.

1. வீறுபேறு அடைதல் 2. பொருள் சேர்த்தல்
3. கல்வி கற்றல் 4. வீடு வீடுகட்டுதல்

(20x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(01) சுருக்கமான விடை தருக.

01. பிரமாவினதும் விஷ்ணுவினதும் தொழில்கள் எவை?
02. காதலாகி.......... என்ற பதிகம் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?
03. நீர் அறிந்த நட்சத்திரங்கள் நான்கின் பெயரைக் குறிப்பிடுக.
04. ஞானக் குழந்தை எனப் போற்றப்படுபவர் யார்.
05. எல்லா இடங்களிலும் தோன்றி எல்லோராலும் காணக்கூடிய விளக்குகள் எவை?
06. பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்கு உகந்த தலங்கள் இரண்டு குறிப்பிடுக.
07. விருந்தோம்பல் என்றால் என்ன?
08. தென்புலத்தார் எனப்படுபவர் யார்?
09. கண்ணப்பநாயனார் சிவனை எவ்வாறு வழிபட்டார்.?
10. உள்ளத்திற்கு ஒளியைத் தரும் விளக்கு எது?



kalvi.lk

(02) பின்வரும் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி பாடியவர், தலம் என்பவற்றை குறிப்பிடுக.

01. இல்லக விளக்கு ……………….

02. காதலாகிக் கசிந்து………………….

03. காப்பதோர் வில்லும்…………..

04. துஞ்சலும் துஞ்சல்…….

(03) ‘‘நாளும் கோளும் நன்மையே செய்யும்…..’’

01. பஞ்சாங்கத்தின் ஐந்து உறுப்புக்களும் எவை?

02. இலங்கையில் புழக்கத்திலுள்ள இரண்டு வகைப் பஞ்சாங்கங்கள் எவை?

03. பஞ்சாங்கம் பார்க்கும் சந்தர்ப்பங்கள் ஐந்து தருக?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

(04) ‘‘மனித வாழ்வே மகத்தானது’’

01. மனித வாழ்க்கையின் நான்கு படிநிலைகளும் எவை?

02. பிதிர்களுக்குரிய விரதங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

03. இல்லறத்தாரின் கடமைகளாக வள்ளுவர் கூறுன எவை?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

(05) ’’உடம்பார் அழியின் உயிரார் அழிவர்….’’

01. இந்த சரீரம் எமக்கு கிடைத்தது இறைவனை வணங்கி முக்தியின்பம் பெறும் பொருட்டேயாம்’’ எனக் கூறியவர் யார்?

02. அகத்தூய்மை பேண உதவும் வழிமுறைகள் மூன்று தருக.

03. எனது முன்னோர்கள் உயிர் இரக்கம் கொண்டு செய்த காரியங்கள் எவை?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

(06) பின்வருவனவற்றுள் இரண்டுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

01. பிதிர் வழிபாடு

02. உடலாரோக்கியம்

03. விருந்தோம்பல்

04. சமூக நல்லிணக்கம்

(5 x 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page